மத்திய பகுதியில், காவிரி ஓடுவதால், அங்கு ஜலக் கஷ்டமும் இல்லை, உணவுக் கஷ்டமும் இல்லை. இந்த மத்தியப் பகுதியிலே ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைநகரமான சென்னைக்கு அருகிலே இந்தக் காவல் துறை அதிகாரிகள் பயிற்சிக்கான கல்லூரிகள், பள்ளிகள் இருப்பது சாலப் பொருத்தமாகும். ஆகவே சென்னைக்கு அருகிலேயே அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

Police Constables arrested for robbery.

* @2 Q.—THIRU C. RUSSEL RAJ (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether two Policemen attached to the Kilpauk Traffic Station, Madras, have been arrested in connection with theft charges; and

(b) if so, whether cases have been filed against them?

திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட காவலர்கள்

திரு. சி. ரஸ்ஸல் ராஜ் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் போக்குவரத்து நிலையத்தில் பணி புரிந்த இரண்டு காவலர்கள் திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 3—1—1975 அன்று நடந்த வழிப்பறியில் கீழ்ப்பாக்கம் போக்குவரத்துக் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் ஒருவர் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தார். வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

Tamil Pandits.

* 31 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Government have passed an order in G.O. Ms. No. 1354, Education, dated 24th August 1972 in

@ 24—10—1975-ம் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

supersession of the orders issued in G.O. Ms. No. 1604, Education, dated 21st September 1970, directing that a few Tamil Pandits of the Tiruchirappalli district, who do not satisfy the prescribed qualification for Tamil Pandits, Grade I, can be continued as Grade I Tamil Pandits with pay protection;

(b) if so, the reason for rejecting similar appeals of a few other Tamil Pandits of the same District, who have acquired the requisite qualifications, even earlier; and

(c) the number of such rejected cases in the District of Tiruchirappalli ?

தமிழ்ப் பண்டிதர்கள்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட முதல்நிலைத் தமிழ்ப் பண்டிதர்களுக் கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியில்லாத தமிழ்ப் பண்டிதர்கள் சிலர், தற்போது வாங்கும் சம்பளத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்பெற்று தொடர்ந்து முதல்நிலைத் தமிழ்ப் பண்டிதர்களாகப் பணியாற்றலாமென அரசு, கல்வித் துறையின் 21—9—1970 ஆம் நாளிட்ட, 1604 ஆம் எண்ணுள்ள அரசாணையை ரத்து செய்து அதற்குப்பதிலாக கல்வித் துறையின் 24—8—1972 ஆம் நாளிட்ட 1354 ஆம் எண்ணுள்ள அரசாணையில் உத்தரவு பிறப்பித்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் தேவையான கல்வித் தகுதிகளை முன்னரே பெற்றுள்ளவர்களுமான வேறுசில தமிழ்ப் பண்டிதர்களிடமிருந்து பெற்ற அதையொத்த வேண்டுகோள்கள் நிராகரிக்கப் பட்டதற்கான காரணங்கள் யாவை ?

(உ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 24—8—1972 நாளிட்ட கல்வித்துறை அரசாணை நிலை எண் 1354 வெளியிடுவதற்கு முன்னர் 1963-ம் ஆண்டில் வந்த மேல்முறையீடுகள் நிராகரிக் கப்பட்டன.

(உ) இரண்டு.

1975 அக்டோபர் 28]

திரு. கே. எஸ். கணபதி : கல்வித் தகுதி இவர்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தும், இப்போது சொல்லப்பட்ட உத்தரவில் 4 பேர்களில் 3 பேர்களுக்கு மட்டுமே முதல்நிலை கொடுக்கப்பட்டு, ஒருவருக்கு இல்லையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ஒருவருடைய கோரிக்கையை நிராகரிப்பதற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த 4 பேர்களுடைய நிலைமைகளும் ஒரே மாதிரி அல்ல. அதிலே திருவாளர்கள் வி. சின்னசாமி, எஸ். சிவப்பிரகாசம் ஆகியோர் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருந்து 4-6-1953, 19-6-1953-ல் அவர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக, மாவட்டக் கழகத்தில் இருந்தபோது, பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி அவர்கள், அவர்களுக்கு முதல்நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு கொடுத்தது தவறு என்று 1969-ம் ஆண்டில் சொல்லி, அவர்களை இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக மாற்றினர். கடந்த 16 ஆண்டுக் காலமாக தொடர்ந்து முதல்நிலை ஆசிரியர்களாக இருந்துவிட்டோம்; ஆகவே, எங்களைத் தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்கவிட வேண்டுமென்று, அந்த ஆசிரியர்கள் மேல் முறையீடு செய்தார்கள். மேல் முறையீட்டை அரசாங்கம் தள்ளுபடி செய்தது. 16 ஆண்டுகளும் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக, போதுமான கல்வித் தகுதி இல்லாத நிலையிலேயே பணியாற்றி வந்ததன் காரணமாக, அந்தக் காலத்தில் கூடுதலாகப் பெற்ற சம்பளத்தை ரெகவர் செய்ய வேண்டுமென்று கருதப்பட்டது. ஆயினும் ஆசிரியர்களின் நிலைமையைக் கருதி, ரெகவர் செய்யப்படாமல் விடப்பட்டது. அவர்கள், அந்தப் பதவி மீண்டும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக அரசாங்க உத்தரவிற்கு எதிராக கோர்ட்டில் ரிட் ஃபைல் செய்தார்கள். அதன் பேரில், கல்வித் தகுதி இல்லை என்பது உண்மைதான், ஆனால் அவர்களை 16 ஆண்டு காலத்திற்கு அனுமதித்துவிட்டு, அவர்களுக்குத் தகுதியில்லை, அவர்களுக்கு உரிமையில்லை என்று சொல்வது சரியல்ல என்று சொல்லி, அரசாங்கத்தினுடைய உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று உயர்நீதி மன்றம் ஏப்ரல் 1972-ல் அறிவித்தது. மறுபடியும் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக அவர்கள் ஆக்கப்பட்டார்கள். ஆகவே அவர்கள் தொடர்ந்து முதல் நிலையாசிரியர்களாக இருக்கின்றார்கள்.

மற்ற இரண்டு பேர்கள் திரு. காசிநாதன் என்பவரையும் திரு. சந்திரசேகரன் என்பவரையும் இரண்டாம் நிலையிலிருந்து முதல்நிலைக்கு உயர்த்தியிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கப்பட்டார்கள். அவர்கள் மேல் முறையீடு

செய்தார்கள். அரசாங்கம் அதைத் தள்ளுபடி செய்தது. அவர்களுக்குக் கொடுத்த கூடுதல் சம்பளத்தை ரெகவர் செய்ய வேண்டுமென்று ஆணை போட்டார்கள். பிறகு ஆசிரியர்கள் என்ற காரணத்தால், ரெகவர் செய்ய வேண்டாமென்று சொல்லப்பட்டது. 1966-ல் இந்த ஆசிரியர்கள் முதல்நிலைத் தமிழாசிரியர் பதவிக்குத் தகுதி பெற்றார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து முதல்நிலைத் தமிழாசிரியர்களாக இருந்து வருகின்றார்கள். இவர்களுக்கு முறைப்படி தரவேண்டிய பதவி உயர்வு எல்லாம் தரப்படும். முதலில் 2 பேருக்கு ஹைக்கோர்ட் ஜட்ஜ்மென்டு இருந்தது. இவர்கள் விஷயத்தில் ஜட்ஜ்மென்டு இல்லை. ஆகவேதான் இவர்களுக்கு இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : 4 பேர்கள் பற்றித்தான் விவரம் இருக்கிறது. 5 பேர்களில், ஒருவரைப் பற்றிய விவரம் கொடுக்கப்படவில்லையென்று நான் நம்புகிறேன். அவர் பெயர் திரு. வரதராஜன் என்பது. இவர்களுடையதைப் போன்றதுதான், அவர் நிலையும். அமைச்சர் அவர்களுடைய குறிப்பில் அவரைப்பற்றி இல்லை என்று தெரிகிறது. 1965-ல் தங்களுடைய தகுதியை அவர்கள் உயர்த்திக் கொண்டுவிட்டார்கள். இருந்தாலும் அவருக்கு முறையாகக் கொடுக்க வேண்டிய பதவி உயர்வு, தகுதி இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டும், இவருக்குக் கொடுக்கப்படவில்லை. 'ரிட்' போட்டிருக்கின்றார்களா என்பது தெரியவில்லை. 'ரிட்' போட்டுத்தான் இவர்கள் தீர்வு காண வேண்டுமென்று இல்லாமல், இப்போது ஆணையில் இருக்கும் உத்தரவின் அடிப்படையில் அரசு உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், திரு. காசிநாதன், திரு. சந்திரஹாசன் ஆகிய 4 பேர்கள் பற்றியது வேறு. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, ஒருவரைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, அறிந்து சொல்லலாம்.

திரு. கே. எஸ். கணபதி : அந்த மாவட்டத்தில் மொத்தம் எத்தனை பேர் என்றுதான் வினா இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட நபரை இதிலே சேர்க்காது விட்டுவிட்டார்களென்று நினைக்கிறேன். தனிக் கேள்வி அதற்காகப் போடுவதைவிட, இதையே தொடர்ந்து அதைப்பற்றி திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்திலேயே பரிசீலிக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆராய்ந்து பார்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.